بسم اللہ الرحمن الرحیم نحمدہٗ ونصلّی علیٰ رسولہ الکریم وعلیٰ عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 3
வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்
வார இதழ் - காதியான்
The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 34
ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது
துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

11 ஸுல்ஹஜ் 1439 ஹிஜ்ரி கமரி 23 ஸஹூர் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி
23 ஆகஸ்ட் 2018

## அல்லாஹ்வின் கட்டளை

قَوْلٌ مَّعْرُوْفٌ وَّمَغْفِرَةٌ خَيْرٌ مِّنْ صَدَقَةٍ يَّتْبَعُهَآ أَذًى ط وَاللّٰهُ غَنِيٌّ حَلِيْمٌ ○

துன்பம் பின் தொடரும் தருமத்தை விட இன்சொல்லும் மன்னித்தலும் சிறந்தவையாகும். மேலும் அல்லாஹ் தேவைகளற்றவனும் சகித்துக் கொள்பவனுமாவான்.
(2:264)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் நமது போதனைகள் அடங்கிய பகுதி எங்கு உள்ளதோ அவற்றை கண்டிப்பாக ஒவ்வோர் அஹ்மதியும் படிக்க வேண்டும். இன்னும் கூறுவதென்றால், முழு நூலையும் படிக்க வேண்டும்**

**இறைச் சட்டங்கள் இருவகைப்படும். அவற்றில் ஒன்று, மலக்குகளாகிய வானவர்களோடு சம்பந்தப்பட்டதாகும். அதாவது, அவர்கள் கீழ்ப்படிவதற்காக மட்டுமே படைக்கப்பட்டவர்களாவர். மேலும் அவர்களின் கீழ்ப்படிதல் அவர்களின் படைப்பிலேயே அமைந்த ஒளிமயமான சிறப்புத் தன்மையாகும். அவர்களால் பாவம் செய்ய முடியாது. மேலும் அவர்களால் நன்மையில் முன்னேறவும் முடியாது. இரண்டாவது சட்டம் மனிதனோடு சம்பந்தப்பட்டதாகும். அதாவது மனிதர்களின் இயல்பில் பாவம் செய்யக்கூடிய பண்பு அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் நன்மையில் முன்னேறவும் முடியும்**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் எழுதிய கிஷ்தி நூஹ் (நூஹ் நபியின் கப்பல்) என்ற நூலிலிருந்து...**

பாவமன்னிப்புக் கோராத பாவிகள் அதாவது இறைவனிடம் ஆற்றலை வேண்டாதவர்கள் தாம் செய்த பாவத்திற்கேற்ற தண்டனையைப் பெற்றுக் கொண்டே இருக்கிறார்கள்.

பாருங்கள்! இப்போது பிளேக் வியாதியும் ஒரு தண்டனையாகவே பூமியில் இறங்கி இருக்கின்றது. இறைவனுக்குக் கீழ்ப்படியாதவர்கள் இதனால் அழிந்து கொண்டிருக்கின்றனர். இவ்வாறிருக்க இறைவனது ஆட்சி பூமியில் இல்லை என்று எவ்வாறு கூற முடியும்? பூமியில் இறைவனது ஆட்சி இருக்கிறதென்றால் மக்களால் குற்றங்கள் ஏன் விளைகின்றன? என நினைக்க வேண்டாம். ஏனெனில் குற்றங்களும் கழா வ கதர் என்னும் (இறைவன் வகுத்த விதியின்) சட்டங்களுக்கு உட்பட்டதாகும்.

ஆகவே அவர்கள் ஷரீஅத் என்னும் மார்க்கச் சட்டங்களுக்கு வெளியே சென்று விட்டாலும் இயற்கைச் சட்டமான அதாவது கழா வ கதர் என்னும் இறைவன் வகுத்த விதிகளிலிருந்தும் அவர்கள் வெளியே செல்ல முடியாது. ஆகவே பாவிகள் இறைவனது ஆட்சியின் நுகத்தடியைத் தமது பிடரியின் மீது ஏந்துவதில்லை என்று எவ்வாறு கூற முடியும்?

பாருங்கள்! இந்த ஆங்கிலேய ஆட்சியில், இந்தியாவில் திருட்டுகளும் கொலைகளும் நடைபெற்று வருகின்றன. மேலும் விபச்சாரம் செய்வோர், வஞ்சகர், லஞ்சம் வாங்குபவர் முதலிய எல்லா விதமான குற்றம் செய்யக் கூடியவர்களும் காணப்படுகிறார்கள். ஆயினும் இந்நாட்டில் ஆங்கில அரசின் ஆட்சியே இல்லை எனக் கூற முடியாது. ஆட்சி இருந்தே வருகிறது. ஆனால் மக்கள் வாழ்க்கை நடத்துவது கடினமாகிவிடும் என்ற அச்சத்தால் அரசானது வேண்டுமென்றே சட்டங்களை இயற்றுவதைச் சரியென நினைக்கவில்லை.

இல்லாவிடின் அரசு எல்லாக் குற்றவாளிகளையும் கஷ்டம் விளைவிக்கக்கூடிய ஒரு கைதிக் கூண்டில் அடைப்பதன் மூலம் அவர்களைக் குற்றங்கள் செய்வதிலிருந்து தடை செய்ய விரும்பினால் அக்குற்றங்கள் மிக எளிதாகத் தடைபட்டு விடும் அல்லது சட்டங்களில் கடினமான தண்டனைகளை இடம் பெறச் செய்தால் அக்குற்றங்களைத் தடுத்து நிறுத்த முடியும்.

ஆகவே இந்நாட்டில் எந்த அளவில் மதுபானம் அருந்தப்படுகிறதோ, தீய நடத்தையுடைய பெண்கள் அதிகரிக்கின்றார்களோ கொலைகள் நடைபெறுகின்றனவோ இவை அனைத்தும் ஆங்கில அரசின் ஆட்சி இங்கு இல்லை என்ற காரணத்தால் விளைந்தவை அல்ல. மாறாக அரசின் மிருதுவான சட்டங்கள்தான் குற்றங்களைப் பெருகச் செய்துள்ளதேயல்லாமல் ஆங்கில அரசே இந்த நாட்டிலிருந்து மறைந்து விட்டதென்பதால் அல்ல என்பதை நீங்கள் புரிந்து கொள்ள முடியும்.

அது மட்டுமல்ல கடினமாகச் சட்டங்களை இயற்றி கொடுமையான தண்டனைகளை விதிப்பதன் மூலம் மக்களைக் குற்றங்கள் செய்வதிலிருந்து தடை செய்ய அரசிற்கு அதிகாரம் உண்டு. இறைவனது அரசாட்சிக்கு எதிரில் ஒன்றுமே இல்லாத மனித ஆட்சிக்கு இந்நிலை என்றால் இறைவனது ஆட்சி எவ்வளவு பெரும் சக்தியும் அதிகாரமும் கொண்டதாக இருக்கிறது!

இறைவனது சட்டங்கள் மேலும் கடினமாக்கப்பட்டு விபச்சாரத்தில் ஈடுபடும் ஒவ்வொருவரையும் மின்னல் தாக்கினால், ஒவ்வொரு திருடனுக்கும் அவனது கைகள் அழுகிக் கீழே விழக்கூடிய நோய் உண்டானால் இறைவனுக்குக் கீழ்ப்படியாத ஒவ்வொரு பகைவரும் அவனது மார்க்கப் பகைவனாகிய ஒவ்வொருவரும் பிளேக்கினால் மரணமடைந்தால் ஒருவாரம் கழிவதற்கு முன்பாகவே அனைத்தும் உண்மையாளர்களாகவும் நல்லடியார்களாகவும் மாற முடியும்.

ஆகவே இறைவனது ஆட்சியானது பூமியில் இருந்தே வருகிறது. ஆயினும் குற்றவாளிகள் விரைவில் பிடிபடாத அளவுக்கு இறை சட்டத்தின் மென்மை சுதந்திரம் கொடுத்துள்ளது. எனவே குற்றவாளிகள் விரைவில் பிடிபடுவதில்லை. ஆயினும் தண்டனைகளும் கிடைத்துக்

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் ஹல்லாது பின் ராஃபி ஸுரகீ, ஹஸ்ரத் ஹாரிஸா பின் சுராக்கா, ஹஸ்ரத் அப்பாது பின் பிஷர், ஹஸ்ரத் சவாத் பின் கஸிய்யா ஆகிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நபித்தோழர்களின் நம்பிக்கை, கலப்பற்ற தன்மை, உண்மை, பரிவு, அன்பு மற்றும் அல்லாஹ்வின் திருத்தூதரிடத்தில் கெண்டிருந்த கலப்பற்ற அன்பு, மேலும் அவர்களுக்காகத் தம்மைத்தாமே அர்ப்பணித்தல் போன்ற ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்

**அல்லாஹ் மின்னிக் கொண்டிருக்கின்ற இந்த நட்சத்திரங்களின் அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே செல்வானாக. மேலும் நமக்கும் அரபி நபி (ஸல்) அவர்கள் மீதான அன்பின் உண்மைத்துவத்தைப் புரிவதற்கான நற்பேற்றை வழங்குவானாக!**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்** **20 ஜுலை 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **வஃபா** மாதம் **20 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஒரு சஹாபி அவருடைய பெயர் ஹல்லாது பின் ராஃபி ஸுரகீ ஆகும். அவர் அன்ஸாரியாக இருந்தார். பத்ர் போரிலும், உஹது போரிலும் கலந்து கொள்ளும் நற்பேறு பெற்ற சஹாபிகளில் ஒருவராக இருந்தார். அவருக்கு அல்லாஹ் நிறைய சந்ததிகளை வழங்கி இருந்தான்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 477, ஹல்லாது பின் ராஃபி (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஒரு அறிவிப்பில் வருகிறது. முஆஸு பின் ரிஃபாஆ அவர்கள் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள். நானும் எனது சகோதரரான ஹல்லாது பின் ராஃபியும் நபி (ஸல்) அவர்களுடன் ஒரு பலவீனமான ஒட்டகத்தில் பயணம் செய்து பத்ர் போரை நோக்கிச் சென்றோம். ரூஹா என்ற இடத்திற்கு முன்னுள்ள பரீத் என்ற இடத்தில் எங்களது ஒட்டகம் உட்கார்ந்து விட்டது. நான் துஆ செய்தேன். அல்லாஹ்வே! நான் உன்னிடம் ஒரு காணிக்கை வைக்கின்றேன். நீ என்னை இதில் மதீனாவிற்குத் திரும்ப வைப்பயாக. அப்போது நான் இந்த ஒட்டகத்தை குர்பானி கொடுத்து விடுவேன்.

நாங்கள் இதே நிலையில் இருந்த போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களைக் கடந்து சென்றார்கள். அன்னார் எங்களிடம், உங்கள் இருவருக்கும் என்னவாயிற்று என்று கேட்டார்கள். நாங்கள் நடந்த விஷயத்தைக் கூறினோம். நபி (ஸல்) அவர்கள் எங்களோடு தங்கினார்கள். உளூ செய்தார்கள். மிஞ்சிய தண்ணீரை அதன் முகத்தில் தெளித்தார்கள். அதனுடைய கழுத்திலும், நெற்றியிலும், முதுகிலும் வாலிலும் தெளித்தார்கள். பிறகு நபி (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள். அல்லாஹ்வே! ராஃபி மற்றும் ஹல்லாது ஆகிய இருவரையும் இந்த ஒட்டகத்தில் பயணம் செய்து எடுத்து வருவாயாக.

பிறகு நபி (ஸல்) அவர்கள் சென்று விட்டார்கள். நாங்களும் பின்னால் செல்வதற்குத் தயாரானோம். எந்த அளவுக்கு என்றால் நபி (ஸல்) அவர்களைச் சென்றடைந்தோம். எங்களுடைய ஒட்டகம் அந்தக் குழுவில் எல்லாரையும் விட முன்னால் இருந்தது. நபி (ஸல்) அவர்கள் எங்களை பார்த்து புன்முறுவல் செய்தார்கள். நபி (ஸல்) அவர்களது துஆவினால் அந்த பலவீனமாக ஒட்டகம் சுறுசுறுப்பானது.

அவர் கூறுகிறார்: நாங்கள் சென்று கொண்டிருந்தோம். பத்ர் மைதானத்தை அடைந்து திரும்பிய போது முஸல்லா என்ற இடத்தை அடைந்த போது அந்த ஒட்டகம் மீண்டும் அமர்ந்தது. எனவே என்னுடைய சகோதரர் அதை அறுத்து அதனுடைய மாமிசத்தைப் பகிர்ந்தளித்தார்கள். பிறகு நாங்கள் அதனை சதகாவாக கொடுத்து விட்டோம்.

(கிதாபுல் மகாஸி லில்வாகிதி, பாபு பத்ர் அல்கிதால், தொகுதி 1 பக்கம் 25 – 1984 ஆம் ஆண்டு ஆலிமில் குதுபுல் அச்சிடப்பட்டது & அல் அஸாபா தொகுதி 2 பக்கம் 181, ஹல்லாது பின் ராஃபி (ரலி) – பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அதாவது அவர் ஒரு நேர்ச்சை செய்திருந்தார். நாங்கள் உரிய இடத்தை அடைந்து விட்டால் அதை குர்பானி கொடுத்து விடுவோம். அதன்படி அவர்கள் அமல் செய்தார்கள்.

அடுத்த சஹாபி பற்றி வருகிறது. அவரது பெயர் ஹார்ஸா பின் சுராக்கா ஆகும். அவரது வஃபாத் ஹிஜ்ரி 2 வது ஆண்டில் பத்ர் போரில் நடந்தது. அவருடைய தாயார் ருபிய்யஃ பின்தே நஸ்ர் ஆகும். ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக்கின் மாமி ஆவார்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 1 பக்கம் 704, ஹார்ஸா பின் சுராக்கா (ரலி) – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹிஜ்ரத்திற்கு முன்னால் இவர் தாயாருடன் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றார். அந்த நேரத்தில் அவரது தந்தை மரணமடைந்திருந்தார்கள்.

(சீரத்துஸ் சஹாபா (ரலி) தொகுதி 3 பக்கம் 299 – 2004 ஆம் ஆண்டு கராச்சியுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவருக்கும் சாயிப் பின் உஸ்மான் பின் மல்வூன் அவர்களுக்குமிடையே சகோதரத்துவத்தை ஏற்படுத்தியிருந்தார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 307, சாயிப் பின் உஸ்மான் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அபூ நயீம் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் ஹாரிஸா பின் சுராக்கா அவர்கள் தமது தாயாருடன் நல்ல முறையில் நடந்து கொள்பவர்கள் ஆவார்கள். எந்த அளவுக்கு என்றால் நான் சுவர்க்கத்தில் நுழைந்த போது ஹாரிஸா அவர்களைப் பார்த்தேன் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹப்பான் பின் அர்கா பத்ர் போரில் அன்னாரை ஷஹீதாக்கினார். அப்போது அவர் மூன்று அம்புகள் எய்தார். அவர்கள் ஒரு தடாகத்திலிருந்து தண்ணீரைக் குடித்துக்

கொண்டிருக்கும் போது அந்த அம்பு அவரது கழுத்தில் பட்டது. அதன் விளைவாக அவர் ஷஹீதானார்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நபி (ஸல்) அவர்கள் நடந்து சென்று கொண்டிருக்கும் போது ஒரு அன்ஸாரி இளைஞர் அவர்கள் முன்னால் வந்தார்கள். அவரிடம் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். ஹாரிஸாவே! நீர் எந்த நிலையில் காலை நேரத்தைச் சந்தித்தீர். அவர் கூறினார். நான் நிச்சயமாக அல்லாஹ்வின் மீது உண்மையான ஈமான் கொண்டவாறு அதிகாலையைச் சந்தித்தேன். நான் அல்லாஹ்வின் மீது உண்மையான ஈமான் கொண்டேன்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள், என்ன கூறுகின்றீர்கள்? ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒரு உண்மை நிலை உண்டு என்று கூறினார்கள். அதற்கு அந்த இளைஞர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது உள்ளம் உலகத்தை முற்றிலுமாகத் துறந்து விட்டது. நான் இரவில் விழித்திருக்கின்றேன். பகலில் தாகித்திருக்கிறேன். அதாவது நான் இரவில் இபாதத் செய்கிறேன். பகலில் நான் நோன்பு நோற்கின்றேன். நான் கண்ணியமும் மேன்மையும் நிறைந்த அந்த படைப்பாளனின் அர்ஷை என் கண்ணால் காண்கின்றேன்.

நான் சுவர்க்கவாதிகளைப் பார்ப்பது போல் இருக்கின்றேன். அவர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் நரகவாதிகளையும் பார்ப்பது போல் இருக்கின்றது. அவர்கள் அதில் கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இதே நிலையில் இருப்பீராக. நீர் எத்தகைய மனிதர் என்றால் அல்லாஹ் உமது உள்ளத்தை ஈமானால் ஒளிமயமாக்கி விட்டான். அவர் கூறினார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்கு ஷஹாதத் கிடைப்பதற்காக துஆ செய்யுங்கள் என்று கூறினார்.

நபி (ஸல்) அவர்கள் அவருக்காக துஆ செய்தார்கள். பத்ர் போரின் நாளில் வாகனம் உள்ளவர்களை அழைக்கும் போது அவர் முதலில் வெளிவந்தார். முதல் முதலில் கொல்லப்பட்ட வாகன ஓட்டியாக இருந்தார். பத்ர் போரில் மரணித்த முதல் அன்ஸாராகவும் அவர் இருந்தார் என்று கூறப்படுகிறது. அவரது மரணச் செய்தி அவரது தாயாருக்குக் கிடைத்த போது அவருடைய தாயார் ரபீஆ நபி (ஸல்) அவர்களிடம் வந்தார்.

எனக்கு ஹாரிஸாவின் மீது எவ்வளவு அன்பு உண்டு என்பது உங்களுக்குத் தெரியும். அவர் எனக்கு மிகவும் தொண்டு செய்பவராக இருந்தார். பிறகு அவர் சுவர்க்கவாதியைச் சார்ந்தவராக இருந்தார் என்றால் நான் அதைப் பொறுத்துக் கொள்வேன். அவ்வாறு இல்லையென்றால் நான் என்ன செய்வேன் என்று இறைவனே அறிந்தவன் என்று அவர் கூறினார்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஹாரிஸாவின் தாயாரே! சுவர்க்கம் ஒன்றல்ல. பல இருக்கின்றன. ஹாரிஸாவோ அந்த உயர்ந்த இடத்தில் இருக்கின்றார். அப்போது அந்த பெண்மணி கூறினார்கள். நான் கண்டிப்பாகப் பொறுமை காப்பேன்.

இன்னோர் அறிவிப்பின் அடிப்படையில் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஹாரிஸா உயர்ந்த சொர்க்கத்தில் இருக்கின்றார் என்று கூறியவுடன் அவரது தாயார் திரும்பிச் சென்று விட்டார். சிரித்துக் கொண்டே நல்லது நல்லது ஹார்ஸாவே என்று கூறினார்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 650–651, ஹாரிஸா பின் சுராக்க (ரலி) – பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

பத்ர் போரின் போது அல்லாஹ் நிராகரிப்பவர்களின் தலைவர்களை மரண பீதியினால் தலை குனிய வைத்து இழிவுபடுத்தினான். பத்ர் போரில் கலந்து கொண்ட முஸ்லிம்களுக்கு கண்ணியத்தை வழங்கினான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பத்ர் சஹாபாக்களைப் பற்றி செய்தி பெற்றார்கள். அதாவது பத்ர் சஹாபிகளை இறைவன் மன்னித்து விட்டான். அதாவது நீங்கள் என்ன செய்தாலும் சரியே. அல்லாஹ் உங்களை மன்னித்து விட்டான் என்று கூறப்பட்டது.

அதாவது நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். அல்லாஹ் உங்களுக்கு சுவர்க்கத்தைத் தந்து விட்டான் என்பது அதன் பொருளல்ல. அதாவது நீங்கள் பாவம் செய்தாலும் சுவர்க்கம் தான் கிடைக்கும் என்று கூறப்படவில்லை. அவர்கள் திருக்குர்ஆனின் வசனங்களுக்கு மாற்றமாக எந்தவொரு செயலையும் செய்ய மாட்டார்கள். அல்லாஹ் தானே அவர்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருப்பான் என்று பொருளாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போரில் ஷஹீதான ஹஸ்ரத் ஹார்ஸா பின் சுராக்கா அவர்களைப் பற்றி கூறினார்கள். அவர் ஜன்னத்துல் ஃபிர்தவ்ஸில் இருக்கிறார்.

ஒரு சஹாபி அப்பாது பின் பிஷர் ஆவார்கள். ஹிஜ்ரி 11 வது வருடம் யமாமா போர் நடந்த போது அன்னார் வஃபாத்தானார்கள். ஹஸ்ரத் அப்பாது பின் பஷர் அவர்களின் சுட்டுப் பெயர் அபூ பிஷ்ர் மற்றும் அபூ ரபீஃ ஆகும். பனூ அப்துல் அஷல் என்ற கோத்திரத்தைச் சார்ந்தவர். அவருடைய சந்ததியாக ஒரே ஒரு மகள் இருந்தார். அவரும் இறந்து விட்டார். அவர் மதீனாவில் முஸ்அ பின் உமைர் அவரது கையில் பைஅத் செய்திருந்தார்.

ஸஅது பின் மாஸ், உஸைர் பின் சுஹைர் இருவருக்கும் முன்பே இஸ்லாத்தில் நுழைந்திருந்தார். மதீனாவில் சகோதர உடன்படிக்கையை ஏற்படுத்திய போது நபி (ஸல்) அவர்கள் அவரை அபூ ஹுஸைஃபா பின் உக்பா அவர்களோடு சகோதரராக ஆக்கியிருந்தார்கள்.

(ஷரஹ் ஸர்கானி தொகுதி 2 பக்கம் 257, பாபு பத்ர் அல்குப்ரா – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்பாது பின் பிஷ்ர் அவர்கள் பத்ர், உஹது, அகழ் மற்றும் அனைத்துப் போர்களிலும் நபி (ஸல்) அவர்களோடு கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கஃப் பின் அஷ்ரபைக் கொலை செய்வதற்காக அனுப்பிய சஹாபாக்களுள் ஒருவர் ஆவார்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 336, அப்பாத் பின் பஷர், 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

கஅப் பின் அஷ்ரஃப் உடைய கொலை சம்பவம் இவ்வாறாகும். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் சீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் இது தொடர்பாக எழுதியுள்ளார்கள்.

சம்பவம் என்னவென்றால், பத்ர் போருக்குப் பிறகு யூதர்களின் உள்ளத்து குரோதம் வெளியே வந்தது. பரிதாபம் என்னவென்றால், நிராகரிப்பவர்கள் முஸ்லிம்களைக் கொன்று விடுவார்கள் என்பது யூதர்களின் எண்ணமாக இருந்தது. ஆனால் யுத்தத்தின் முடிவு முஸ்லிம்களின் பக்கம் வெற்றி கிடைத்தது. இதன் காரணத்தினால் அவர்களின் உள்ள குரோதம் வெளியே வந்தது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:

பரிதாபம்! பனூ கைனுகா நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட போதும் யூதர்கள் சீர்திருத்தத்தின் பக்கம் வர முடியாமல் போய் விட்டது. அவர்கள் தங்களது விஷமத்திலும் குழப்பத்திலும் முன்னேறிக் கொண்டே சென்றனர். கஅப் பின் அஷ்ரஃபின் கொலை சம்பவமும் இதே தொடர்பின் ஒரு செயலே ஆகும். கஅப் மத ரீதியாக ஒரு யூதராவார். ஆனால் அவர் யூத சந்ததிகளைச் சார்ந்தவராக இருக்கவில்லை. அவருடைய தந்தை அஷ்ரஃப் ஓர் அரபி ஆவார். பனூ நபான் என்ற கோத்திரத்தின் ஒரு கிளையைச் சார்ந்தவராக

இருந்தார். இவர் நல்ல சாமர்த்தியசாலி ஆவார். இவர் மதீனாவிற்கு வந்து பனூ நஸீரோடு நட்பு கொண்டார். அவரோடு எந்த அளவுக்கு நட்பு அதிகமாகியது என்றால் பனூ நஸீர் கூட்டத்தின் தலைவராகிய அபூ ராஃபி பின் அபுல் ஹகீக் என்பவர் தன்னுடைய மகளை அவருக்கு மணமுடித்துக் கொடுத்தார். அந்த பெண்ணின் வயிற்றில் தான் கஅபு பிறந்தார்.

அவர் பெரியவராகி தந்தையை விட பெரும் மரியாதையைப் பெற்றார். எந்த அளவுக்கு என்றால் அவர் கடைசியில் எல்லா அரபு யூதர்களும் அவரை தமது தலைவராகக் கருதினார்கள். கஅபு ஒரு வசீகரமான அழகான மனிதராகவும் இருந்ததோடு நல்ல கவிதை புனையும் ஆற்றல் கொண்டவராகவும் செல்வமிக்கவராகவும் இருந்தார்.

தன்னுடைய சமுதாயத்தின் அறிஞர்கள் மற்றும் உறவினர்களுக்குப் பொருள் உதவி செய்து தன்னுடைய கீழே வைத்திருந்தார். ஆனால் குணத்தைப் பொருத்தவரையில் மிகவும் மோசமான இயல்பை உடையவராக இருந்தார். தந்திரங்கள் செய்யும் ஆற்றல் உடையவராக இருந்தார். அதில் அவருக்கு நல்ல திறமை இருந்தது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனா வந்த போது கஅப் பின் அஷ்ரஃப் மற்ற யூதர்களோடு இணைந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களோடு உடன்படிக்கையில் கலந்து கொண்டார். அந்த உடன்படிக்கை நட்பை வளர்ப்பது, அமைதியை ஏற்படுத்துவது, பாதுகாப்பு வழங்குவதில் ஒருவர் மற்றவருக்கு உதவியாக இருப்போம் என்று போடப்பட்ட உடன்படிக்கையாகும்.

வெளிப்படையாக அவர் உடன்படிக்கை செய்திருந்தார். ஆனால் உள்ளுக்குள்ளேயே கஅபின் உள்ளத்தில் காழ்ப்புணர்ச்சியும் பகைமையும் இருந்தது. தமது மறைமுகமான தந்திரங்களால் இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் நிறுவனர் மீது எதிர்ப்பை தொடங்கியிருந்தார்.

அன்னார் இவ்வாறு எழுதியுள்ளார்கள். கஅபு ஒவ்வொரு வருடமும் யூத ஆலிம்கள் மற்றும் கவிஞர்களுக்கு பொருள் உதவி செய்து வந்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது ஹிஜ்ரத்திற்குப் பிறகு அம்மக்கள் தங்களது வருடாந்திர உதவிக்காக அவரிடம் வந்த போது அவர் பேச்சுக்கிடையே அவர்களிடத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பற்றி குறிப்பிட்டார்.

மார்க்க ரீதியான கேள்விகளைக் கேட்டார். அம்மக்களும் "வெளிப்படையாகப் பார்க்கும் போது நமக்கு வாக்களிக்கப்பட்ட இறைத்தூதர் தான் வந்திருக்கிறார் என்பது தெரிய வருகிறது" என்று கூறினார்.

இதைக் கேட்டு கஅப் மிகவும் கலவரமடைந்தார். அவ்வளவு பேரையும் ஏசினார். அவர்களுக்கு வழங்கி வந்த பொருள் உதவியை நிறுத்தினார். யூத அறிஞர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட போது சிறிது நாள் கழித்து அவர்கள் மீண்டும் கஅபிடம் போனார்கள். கூறினார்கள். எங்களுக்கு இல்ஹாமைப் புரிவதில் தவறு ஏற்பட்டு விட்டது. நாங்கள் மீண்டும் சிந்தித்தோம்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நமக்கு வாக்களிக்கப்பட்ட இறைத் தூதர் அல்ல என்றார்கள். இந்தப் பதிலால் கஅபின் பிரச்சனை தீர்ந்தது. அவர் மகிழ்ச்சியடைந்தவாறு அவர்களுக்கு வருடாந்திர உதவித் தொகையை வழங்கினார்.

அன்னார் எழுதுகின்றார்கள். இது ஒரு மார்க்க ரீதியான பிரச்சனையாக இருந்தது. இது ஒரு நெருடலான விஷயமாக இல்லை. ஆனால் அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியாத அளவிற்கு மோசமான விஷயமாக இருக்கவில்லை. மக்கள் எதிர்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அப்படிப்பட்ட விஷயமல்ல. இதற்காக கஅப் கொலை செய்யப்பட வேண்டியதில்லை என்று மக்கள் நினைக்கிறார்கள். ஆனால் விஷயம் என்னவென்றால் கஅபின் எதிர்ப்பின் நிலை மிகவும் அபாயகரமானதாக ஆகி விட்டது. இறுதியில் பத்ர் போருக்குப் பிறகு அவர் எந்த அளவுக்கு மோசமான நிலையை எடுத்தார் என்றால் அது மிகவும் குழப்பத்தை ஏற்படுத்துவதாக இருந்தது.

இதன் காரணத்தினால் முஸ்லிம்களுக்கு மிகவும் மோசமான சூழ்நிலை ஏற்பட்டது. உண்மையில் பத்ர் போருக்கு முன்பே கஅப் நினைத்திருந்தார். முஸ்லிம்கள் ஓர் ஆர்வத்தில் நபி (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்து விட்டார்கள். கண்டிப்பாக முஸ்லிம்கள் தாமே விலகி விடுவார்கள். தங்களுடைய முன்னோர்களின் மதத்திற்குத் திரும்பி விடுவார்கள் என்று நினைத்தார். ஆனால் பத்ர் போரில் முஸ்லிம்களுக்கு எதிர்பார்க்காத வெற்றி கிடைத்துவிட்டது. குரைஷிகளின் தலைவர்கள் கொல்லப்பட்டு விட்டனர்.

எனவே இந்த புதிய மார்க்கம் இனி அழிவதற்கான வழியில்லை என்று நினைத்து பத்ருக்குப் பிறகு முழுமையாக முயன்று இஸ்லாத்தை ஒழிப்பதற்காகத் திட்டமிட்டார். அவருடைய உள்ளத்து குரோதத்தின் முதல் வெளிப்பாடு இவ்வாறு ஏற்பட்டது. பத்ருடைய வெற்றியின் செய்தி மதீனாவிற்கு வந்தடைந்ததும் அந்த செய்தியைக் கேட்டு கஅப் சப்தமிட்டு இந்த செய்தி பொய்யாக தெரிகிறது.

நபி (ஸல்) அவர்கள் இவ்வளவு பெரிய குரைஷிகளின் படையை வெற்றி கொண்டிருக்க முடியாது. மக்காவின் தலைவர்கள் மண்ணில் வீழ்ந்திருக்கவும் முடியாது. இந்த செய்தி உண்மையென்றால் வாழ்வதை விட மரணிப்பது எவ்வளவோ நல்லது என்று கஅப் கூறினார்.

இந்தச் செய்தி உண்மையானது தான் என்பது நிரூபணமானதும் கஅபிற்கு உறுதியாகி விட்டது. பத்ர் போரில் முஸ்லிம்களின் வெற்றி அவரது கற்பனையிலும் இல்லாததாக இருந்தது. உடனே அவர் கோபமடைந்து பயணத்திற்கு ஏற்பாடு செய்தவாறு மக்காவிற்குச் சென்றார். தன்னுடைய மோசமான கவிதைகளால் குரைஷிகளின் உள்ளத்திலுள்ள அந்த நெருப்பைத் தூண்டி விட்டார். அவர்களுடைய உள்ளத்தில் முஸ்லிம்களின் இரத்தத்தின் மீது அடங்காத ஒரு தாகத்தை ஏற்படுத்தினார்.

அவருடைய உள்ளத்தை பழிவாங்குதலின் உணர்வால் நிறைத்தார். கஅபின் அந்த தூண்டுதலால் அவர்களது உள்ளத்தில் ஒரு கடுமையான உத்வேகம் உருவானது. எனவே அவர் அவர்களை கஃபஅத்துல்லாஹ்வின் அருகே அழைத்துச் சென்று அதன் திரையைப் பிடித்து சத்தியம் செய்ய வைத்தார்.

இஸ்லாத்தை இந்த உலகை விட்டு அகற்றாத வரை நிம்மதியடைய மாட்டோம் என்று கூறினார்கள். இது மக்காவின் காஃபிர்கள் எடுத்த உறுதிமொழியாகும். மக்காவில் இது போன்ற மோசமான நிலையை உருவாக்கிவிட்ட அந்த துர்பேறு கொண்ட மனிதன் ஒவ்வொரு சமுதாயமாகச் சென்று எல்லாரையும் முஸ்லிம்களுக்கு எதிராகத் தூண்டினார்.

பிறகு மதீனாவிற்குத் திரும்பி வந்து முஸ்லிம் பெண்களைக் குறித்து துர்கவிதை பாடினார். தன்னுடைய ஆவேசமூட்டும் கவிதைகள் மூலம் தீய முறையில் முஸ்லிம் பெண்களைப் பற்றிக் கூறினார். நபியின் குடும்பத்தைச் சார்ந்த பெண்களையும் கூட இந்த அசுத்தமான கவிதை பாடுவதிலிருந்து அவர் விட்டு வைக்கவில்லை. நாட்டில் இந்த கவிதைகளைப் பற்றிய சர்ச்சையை உருவாக்கினர். இறுதியில் அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைக் கொலை செய்ய திட்டம் தீட்டினார்.

அவர்களை ஒரு விருந்திற்கு தன்னுடைய வீட்டிற்கு அழைத்து சில யூத இளைஞர்களைக் கொண்டு கொலை செய்யத் திட்டமிட்டார். அல்லாஹ்வின் அருளால் குறித்த நேரத்தில் அது தெரிய வந்தது. அவருடைய சூழ்ச்சி வெற்றி பெறவில்லை. கஅபுக்கு எதிரான பிரச்சனை யுத்தத் தூண்டுதல், விவாதங்கள், விரோதங்கள், குழப்பங்கள், கொலை முயற்சி ஆகியவை எந்த அளவுக்கு ஆகிவிட்டனவென்றால் நபி (ஸல்) அவர்கள் மதீனா வந்த பிறகு சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் அன்னார் மதீனாவின்

சட்டத்தின் பாதுகாவலராகவும் ஆட்சியாளராகவும் இருந்ததனால் கஅப் தன்னுடைய சூழ்ச்சிகளின் காரணத்தினால் கொலை செய்யத்தக்கவர் என்று இவ்வாறு சட்டம் இயற்றினார்கள்.

தன்னுடைய சில சஹாபிகளிடம் அவரைக் கொலை செய்யுமாறு கூறினார்கள். கஅபின் குழப்பங்களின் காரணத்தால் மதீனாவில் அவருடைய கொலையைப் பகிரங்கமான முறையில் நிறைவேற்ற முடியாமல் இருந்தது. அவர் கொலை செய்யப்பட்டால் மதீனாவில் அதனால் பெரிய யுத்தம் ஏற்படும் சூழ்நிலை இருந்தது.

அதனால் எவ்வளவு இரத்தம் சிந்தப்படும் என்று தெரியாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முடிந்த அளவுக்கு அந்த இரத்தம் சிந்துதலைத் தவிர்க்க விரும்பினார்கள். அவரால் ஒரு சண்டை உருவாகுவதை விரும்பவில்லை.

எனவே கஅபை ஒரு சிலர் மட்டுமே சென்றுப் பகிரங்கமாக அல்லாமல் கொலை செய்ய வேண்டும் என்று முடிவு செய்தார்கள். அதாவது ஒரு சரியான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவரைக் கொன்று விட வேண்டும் என்று முடிவு செய்தார்கள். இந்த பொறுப்பை அன்னார் அவுஸ் கோத்திரத்தைச் சார்ந்த முஹம்மது பின் மஸ்லமா அவர்களிடம் ஒப்படைத்தார்கள்.

அவரிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் என்ன முடிவு எடுத்தாலும் அவ்ஸ் கோத்திரத்தின் தலைவரான ஸஅது பின் முஆஸ் உடன் ஆலோசனை செய்த பிறகே செய்ய வேண்டும். முஹம்மது பின் மஸ்லமா கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அமைதியான முறையில் கொலை செய்யுமாறு கூறி இருந்தீர்கள். அவ்வாறு எனில் ஏதாவது சாக்குப் போக்குகளைக் கூறி அவரை வீட்டிலிருந்து வெளியே கொண்டு வந்து ஒரு பாதுகாப்பான இடத்தில் வைத்து தான் கொல்ல வேண்டும்.

அன்னார் இந்த இக்கட்டான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு மவுனமான முறையில் தண்டனையை நிறைவேற்றுவதற்கான ஆலோசனை கேட்டார். ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா ஸஅது பின் மாஸ் அவர்களது ஆலோசனையுடன் இன்னும் சில சஹாபாக்களைத் துணைக்கு அழைத்துக் கொண்டு கஅபின் வீட்டிற்குச் சென்று அவரிடம் கூறினார்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எங்களிடம் ஸதகா கேட்கின்றார்கள். நாங்கள் கஷ்டத்தில் இருக்கிறோம். நீங்கள் கருணை காட்டுங்கள். உங்களால் உதவி செய்ய முடியுமா? இதைக் கேட்டு கஅப் மகிழ்ச்சியுடன் சிரித்தார். கூறினார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் நிம்மதியிழந்து அவரை விட்டு விடக்கூடிய காலம் தூரத்தில்லை.

அப்போது முஹம்மது கூறினார். நாங்கள் முஹம்மது (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதாக ஏற்றுக் கொண்டுள்ளோம். மேலும் இந்த இயக்கத்தின் விளைவு எப்படி இருக்கிறது என்பதையும் நாங்கள் பார்க்கிறோம். ஆதனால், நீங்கள் இப்பொழுது அவர்களுக்குக் கடன் தருவீர்களா? இல்லையா? என்று மட்டும் கூறுங்கள்.

அதற்கு அவர் ஆம். ஆனால், ஏதாவதொரு பொருளை அடமானம் வையுங்கள் என்று கஅப் கூறினார். என்ன விஷயம் என்று முஹம்மது கேட்டார். அவர் கூறினார். நீங்கள் உங்களுடைய பெண்களை அடமானமாக வைக்க வேண்டும். முஹம்மது தன்னுடைய கோபத்தை அடக்கிக் கொண்டவாறு அது எவ்வாறு முடியும் என்று கேட்டார். உம்மைப் போன்ற மனிதர்களிடம் எம்முடைய பெண்களை வைக்க முடியுமா? என்று கேட்டார்.

அதற்கு அவர், சரி! விடு. உமது மகனையாவது வை என்று கூறினார். அதுவும் சாத்தியமற்றது என்று முஹம்மது கூறினார். நான் முழு அரபு நாட்டின் வாழ்வாதாரத்தையும் என் தலையில் எடுத்துக் கொள்ள முடியாது என்று கஅப் கூறினார். முஹம்மது கூறினார். நீங்கள் தயவு காட்டினால் எங்களுடைய ஆயுதங்களை தருகிறோம். கஅப் திருப்தியடைந்தார். இரவிலேயே தருவதாகவும் வாக்குறுதி கூறினார். இரவானதும் எல்லா ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு கஅபின் வீட்டிற்கு வந்தார்கள். அவர்களால் வெளிப்படையாகவே ஆயுதங்களைக் கொண்டு வர முடிந்தது. பேசிக் கொண்டே அவரை ஓர் இடத்திற்கு அழைத்து வந்தார்கள். பிறகு நடந்து கொண்டிருக்கும் போதே அவரை கையகப்படுத்திக் கூட வந்த சஹாபிகள் வாளினால் அவரைக் கொலை செய்தார்கள்.

முஹம்மது பின் மஸ்லமா மற்றும் அவருடன் இருந்தவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். அவரைக் கொலை செய்தது பற்றி நபி (ஸல்) அவர்களுக்குத் தகவல் கொடுத்தார்கள். அவர் கொலை செய்யப்பட்ட செய்தி பிரபல்யமானது. நகரில் அதனால் ஒரு பீதி உருவானது. யூத மக்கள் வேகம் கொண்டார்கள். மறுநாள் அதிகாலை யூதர்களின் ஒரு கூட்டம் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்து முறையிட்டது. எங்களது தலைவராகிய கஅபைக் கொலை செய்து விட்டார்கள் என்றார்கள்.

அதனைக் கேட்டு நபி (ஸல்) அவர்கள், அவர்கள் கூறுபவற்றை எல்லாம் கேட்டு விட்டு கஅப் என்னென்ன தவறுகளெல்லாம் செய்திருக்கிறார் என்று உங்களுக்குத் தெரியுமா? என்று கூறினார்கள். பிறகு அவர்கள் சுருக்கமாக, கஅபின் உடன்படிக்கை மீறல், போர் திட்டங்கள், குழப்பம் விளைவித்தல், கொலை முயற்சி ஆகியவற்றை எடுத்துக் கூறினார்கள்.

இதைக் கேட்டு அந்த மக்கள் அமைதியாகி விட்டார்கள். பிறகு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். வருங்காலத்திலாவது நீங்கள் எங்களோடு ஒத்துழைத்தால் பகைமையுடன் குழப்பம் விளைவிக்காமல் இருக்க வேண்டுமென்றும் வருங்காலத்திற்காக யூதர்கள் முஸ்லிம்களுடன் அமைதியான முறையில் வாழ வேண்டும். குழப்பத்திலிருந்து விலகி இருக்க வேண்டும் என்று ஒரு புதிய ஒப்பந்தம் போடப்பட்டது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களால் எழுதப்பட்ட சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல், பக்கம் 466–470)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்கள் கூறியதைக் கேட்டு விட்டு முஸ்லிம்கள் அவரைக் கொல்லவில்லை என்று கூறவில்லை. மாறாக, அவருடைய குற்றங்களை எடுத்துக் கூறினார்கள். அதனுடைய வெளிப்படையான விளைவைக் கூறினார்கள். கொலை அதற்குப் பிறகு செய்யப்பட்டுள்ளது. பிறகு யூதர்கள் அன்னார் கூறியது சரிதான் என்று ஒப்புக் கொள்ள வேண்டியது வந்தது. இதுபோன்ற சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாமல் இருப்பதற்காக புதிய ஒப்பந்தம் போடப்பட்டது.

பிறகு அமைதி நிறைந்த ஒரு சமூகம் உருவாகுவதற்காக இது செய்யப்பட்டது. ஏனென்றால், யூதர்கள் இதற்குப் பதிலடி கொடுக்க முஸ்லிம்கள் திரும்பித் தாக்க இவ்வாறான சூழல் உருவாகாமல் இருக்க அவ்வாறு செய்தார்கள். இந்தக் கொலையை எதிரிகள் தவறாக கருதியிருந்தால் ஒரு போதும் அமைதியாக இருந்திருக்க மாட்டார்கள். அதற்குப் பதிலுக்கு இரத்தம் சிந்த வேண்டும் என்று கோரிக்கை வைத்திருப்பார்கள். அந்த கோரிக்கையை அவர்கள் வைக்கவில்லை.

இதிலிருந்து தெரிய வருவதாவது அக்காலத்து சட்டத்திற்கேற்ப இது அனுமதிக்கப்பட்டதாகும். எந்த குழப்பத்தை அவர் பரப்பினாரோ அது கொலையை விடக் கொடியது. அத்தகைய குற்றவாளிகளுக்கு அதுவே தண்டனையாக இருந்தது. அக்காலத்து நடைமுறைக்கேற்ப அன்னார் இதனைச் செய்திருந்தார்கள். அக்காலத்து நடைமுறைக்கேற்ப இவ்வாறு தண்டனை கொடுக்க முடியும்.

இவ்வாறு நடைமுறை இல்லை என்றால் வழக்கு நடத்தி வெளிப்படையாக ஏன் அவருக்கு தண்டனை கொடுக்கப்படவில்லை என்று யூதர்கள் கேள்வி கேட்டிருப்பார்கள். ஆகவே இந்த கொலை முற்றிலும் அனுமதிக்கப்பட்டதும் தண்டனையும் ஆகும் என்று தெரிய வருகிறது.

ஆனால் இன்னொன்றையும் நினைவில் கொள்ள வேண்டும். இக்காலத்துத் தீவிரவாத அமைப்புகள் கொலை செய்கிறார்கள். அவர்கள் இவ்வாறு தாம் கொலை செய்வது அனுமதிக்கப்பட்டது என்று கருதுகிறார்கள். முதலில் புரிய வேண்டும். இவ்வாறு இங்கு குழப்பம் செய்யப்படுகிறது. இங்கு கொலை செய்வது குழப்பவாதிகளாவர்.

அங்கோ குற்றவாளிகளுக்குத் தண்டனை கொடுக்கப்பட்டது. குடும்பத்தினருக்கோ அல்லது மற்றவர்களுக்கோ தண்டனை கொடுக்கப்படவில்லை. ஆனால் இவர்களோ அப்பாவிகளைக் கொலை செய்கிறார்கள். குழந்தைகளைக் கொலை செய்கிறார்கள். பலரை அநாதையாக்குகிறார்கள். நாடு கடத்துகிறார்கள்.

எவ்வாறிருப்பினும் இக்காலத்து சட்டத்திற்கேற்ப இது அனுமதிக்கப்பட்டதும் அல்ல. அக்காலத்தில் இந்த தண்டனை சரியானதாக இருந்தது. அனுமதிக்கப்பட்டதாகவும் இருந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அப்பாது பின் பிஷர் அவர்களை பனூ சுலைம் மற்றும் முஸைனா கோத்திரத்தினருக்கு ஸக்காத் வசூல் செய்வதற்காக அனுப்பினார்கள்.

அப்பாது பின் பிஷர் அவர்கள் பத்து நாட்கள் அங்கு தங்கியிருந்தார்கள். அங்கிருந்து திரும்பும் போது பனூ முஸ்தலிக்கிடம் ஸக்காத் வசூல் செய்யச் சென்றார்கள். அங்கும் பத்து நாட்கள் தங்கினார்கள். பிறகு மதீனா திரும்பி வந்தார்கள்.

பிறகு இவ்வாறும் ஒரு அறிவிப்பு வருகிறது. அப்பாது பின் பிஷரை ஹுனைன் போரில் நபி (ஸல்) அவர்கள் போர் செல்வங்களைக் கண்காணிக்கும் பொறுப்பை வழங்கி இருந்தார்கள். தபூக் போரில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டவர்களை கண்காணிக்கும் பொறுப்பை இவர்களிடம் வழங்கி இருந்தார்கள். அவர் வீரமிக்க சஹாபாக்களைச் சார்ந்தவராக இருந்தார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 336, அப்பாது பின் பஷர் (ரலி), 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

அன்ஸார் சகோதரர்களில் மூன்று பேர் மிகவும் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றிருந்தார்கள். அவர்களுக்கு மேல் வேறு எவரையும் கூற முடியாதவர்களாக இருந்தார்கள். அவர்கள் அனைவருமே பனூ அப்துல் அஷர் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் சஅது பின் மஆஸ், ஹஸ்ரத் உஸைது பின் ஹுஃபைர், ஹஸ்ரத் அப்பாது பின் பிஷர் ஆகியோர் ஆவர்.

ஹஸ்ரத் அப்பாது பின் பிஷர் அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அன்ஸார் சகோதரர்களை விளித்து, அன்ஸார் கூட்டத்தினரே! உங்கள் கோத்திரம் என்னுடைய கோத்திரமாகும். அதாவது நீங்கள் உடம்பை ஒட்டி இருக்கின்ற ஆடைகளைப் போன்றவர்கள். மற்றவர்கள் போர்வையை போன்றவர்கள். அது பறந்து விடுகிறது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"உங்களிடமிருந்து எனக்கு எந்த விதமான துன்பமும் வராது என்று எனக்கு நம்பிக்கை இருக்கின்றது".

ஹஸ்ரத் அப்பாது பின் பஷர் அவர்கள் யமாமா போரில் 45 வது வயதில் ஷஹீதானார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனது வீட்டில் தஹஜ்ஜுது தொழுது கொண்டிருந்தார்கள். அப்போது அப்பாது பின் பிஷருடைய சப்தத்தைக் கேட்டார்கள். அவர் மஸ்ஜிதில் தொழுது கொண்டிருந்தார். நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். ஆயிஷாவே! இது அப்பாதுடைய குரலா? அதற்கு நான் ஆம் என்றேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வே! அப்பாதின் மீது கருணை காட்டுவாயாக என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் மூலமாக அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது சஹாபாக்களில் இரண்டு பேர் ஓர் இருள் நிறைந்த இரவில் நபி (ஸல்) அவர்களிடமிருந்து வெளியே வந்தார்கள். ஒன்று அப்பாது பின் பிஷர், இன்னொருவர் உஸைது பின் ஹுஃபைர் ஆவார்கள். அவர்களுக்கு முன்பாக இரண்டு விளக்குகள் ஒளியூட்டிக் கொண்டிருந்தன. இவ்வாறு அவர்கள் வீட்டிற்கு சென்றார்கள். அப்போது அவ்விருவருடனும் ஒவ்வொரு விளக்கு இருளில் ஒளி தருவதற்காக இருந்தது. இவ்வாறு அவர்கள் தமது வீட்டிற்கும் சென்றார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுஸ் சலாத் ஹதீஸ் எண் 465 & (சஹீஹுல் புகாரி, கிதாபுஷ் ஷஹாதத் ஹதீஸ் எண் 2655 & அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 149–150, அப்பாது பின் பஷர் (ரலி) – பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹுதைபிய்யா உடன்படிக்கையிலும் இவர் கலந்து கொண்டுள்ளார். இந்த பயணம் தொடர்பாகச மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:

நபி (ஸல்) அவர்களுடன் 1400 சஹாபிகள் ஹிஜ்ரி ஆறாவது ஆண்டின் ஸுல்கஅதா மாதத்தில் திங்கட்கிழமையன்று மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள். இந்த பயணத்தில் அவர்களுடன் அவர்களுடைய கண்ணியத்திற்குரிய துணைவியாரான உம்மே சல்மா அவர்களும் உடன் இருந்தார்கள்.

நுபைலா பின் அப்தில்லாஹ் அவர்களை மதீனாவிற்கு அனுப்பினார்கள். அங்கு உம்மே மக்தூம் (ரலி) என்ற கண் தெரியாத சஹாபி அமீராக இருந்தார். இவர் ஹுல் கஅதாவை அடைந்த போது மதீனாவின் 6 மைல் தூரத்தில் இருக்கும் போது மக்காவின் சாலையில் அவர்கள் தங்குமாறு கட்டளையிட்டார்கள்.

அவர்கள் லுஹர் தொழுகைக்குப் பிறகு 70 குர்பானி ஒட்டகங்கள் மீதும் அடையாளம் இடுமாறு கட்டளையிட்டார்கள். சஹாபாக்களிடம், ஹாஜிகளுடைய அந்த பிரத்யேக ஆடையான இஹ்ராம் ஆடையை அணியுமாறு கட்டளையிட்டார்கள்.

தாமும் இஹ்ராம் அணிந்து கொண்டார்கள். பிறகு குரைஷிகளின் நிலைமைகளை அறிந்து கொள்வதற்காக அதாவது ஏதாவது விஷமம் செய்யும் எண்ணத்தில் அவர்கள் இருக்கின்றார்களா? என்பதை அறிந்து கொள்வதற்காக ஜஸா என்ற கோத்திரத்தைச் சேர்ந்த மக்காவிற்கு அருகில் தங்கியிருந்த புஸ்ர் பின் சுஃப்யான் என்பவரை அனுப்பி சிறிது சிறிதாக மக்காவை நோக்கிச் சென்று அவர்களது நிலைமைகளை தெரிந்து வருவதற்காக முஸ்லிம்கள் ஒன்றிணைந்து முன்னேறிச் செல்லுமாறு அப்பாது பின் பிஷருடைய தலைமையில் இருபது பேரைக் கொண்ட ஒரு குழுவை நியமித்தார்கள்.

அவர்கள் சில நாட்கள் பயணத்திற்குப் பிறகு மக்காவிற்கு இரண்டு மன்ஸில் தூரத்திலிருந்த அஸ்ஃபான் என்ற இடத்தை அடைந்த போது அவர்களுடைய செய்தியாளர் திரும்பி வந்து அவர்களுக்குத் தெரிவித்தார். மக்கத்து குறைஷிகள் மிகவும் ஆவேசமாக இருக்கிறார்கள். உங்களைத் தடுத்து நிறுத்துவதற்கான உறுதி பூண்டுள்ளார்கள்.

எந்த அளவுக்கு என்றால் அவர்களில் பலர் தங்களுடைய அந்த ஆவேசத்தை வெளிப்படுத்துவதற்காக சிறுத்தையின் தோலை அணிந்து கொண்டார்கள். யுத்தத்திற்கான உறுதி எடுத்தவாறு எல்லா சூழ்நிலையிலும் முஸ்லிம்களை தடுத்து நிறுத்த வேண்டும் என்று விரும்பினார்கள் என்றும் குரைஷிகள் சில வாகனமுடையவர்களுடன் அதுவரை முஸ்லிமாகாமல் இருந்த காலித் பின் வலீத் அவர்களின் தலைமையில் முன்னோக்கி அனுப்பி வைத்திருந்தார்கள் என்றும் அந்த குழு இப்போது முஸ்லிம்களை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்றும் அக்குழுவில் இக்ரிமா பின் அபீ ஜஹ்லும் இருந்தார் என்ற செய்தி அன்னாருக்கு தெரிவிக்கப்பட்டது.

இந்த செய்தி அவருக்கு கிடைத்ததும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சண்டையை தவிர்ப்பதற்காக சஹாபாக்களுக்கு கட்டளையிட்டார்கள். மக்காவின் எல்லோருக்கும் தெரிந்த வழிகளை விட்டு விட்டு வலது பக்கத்திலிருந்து முன்னேறுமாறு கட்டளையிட்டார்கள். இவ்வாறு முஸ்லிம்கள் கடற்புறத்திலுள்ள இக்கட்டான வழிகளில் நடந்து சென்று முன்னேற தெடங்கினார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களால் எழுதப்பட்ட சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல், பக்கம் 749–750)

அங்கு ஹுதைபிய்யா உடன்படிக்கையின் சந்தர்ப்பத்தின் போது விஷயங்களைடச் சேகரிப்பதற்காக அனுப்பப்பட்ட அந்த குழுவில் அப்பாது பின் பிஷர் அவர்களும் இருந்தார்கள். இவர் மிகவும் நம்பிக்கைக்குரியவராக இருந்தார்கள்.

நபி (ஸல்) அவர்களுக்கு அன்னார் மீது மிகவும் நம்பிக்கை இருந்தது. ஹஸ்ரத் அப்பாது பின் பிஷர் அவர்கள் ஹுதைபிய்யா உடன்படிக்கையின் போது நடந்த பைஅத்தே ரிழ்வானின்போது அதில் கலந்து கொண்ட சஹாபாக்களில் ஒருவராக இருந்தார். ஸாதர் ரிகா என்ற போரில் நடந்த சம்பவமானது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஓர் இரவில் ஓர் இடத்தில் தங்கியிருந்தார்கள். அங்கு கடுமையான சூறை காற்று வீசியது. நபி (ஸல்) அவர்கள் ஒரு கூடாரத்தில் தங்கியிருந்தார்கள்.

அன்னார் சஹாபாக்களிடம், இன்று இரவு எனக்கு யார் பாதுகாப்பு வழங்குவார்கள் என்று கேட்டார்கள். அப்போது அப்பாது பின் பிஷர் அவர்களும் ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் அவர்களும் எழுந்து நின்று நாங்கள் உங்களுக்கு இன்று பாதுகாப்பு வழங்குவோம் என்று கூறினார்கள்.

அதற்குப் பிறகு கூடாரத்திற்கு வெளியில் இருந்த பாறையின் மீது அவர்கள் இருவரும் இருந்தனர். பிறகு அப்பாது பின் பஷர் ஹஸ்ரத் அம்மார் பின் யாஸர் அவர்களிடம், முன் இரவில் நான் காவலுக்கு இருக்கிறேன். நீங்கள் செல்லுங்கள். பின் இரவில் நீங்கள் காவலுக்கு இருங்கள். நான் சென்று தூங்குகிறேன் என்று கூறினார்.

இந்த வகையில் ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் அவர்கள் தூங்கி விட்டார்கள். ஹஸ்ரத் அப்பாது பின் பிஷர் அவர்கள் நின்றவாறு தொழுது கொண்டிருந்தார்கள். அங்கு நஜது பகுதியில் நபி (ஸல்) அவர்களால் அவர்களின் வரம்பு மீறுதலுக்காக பிடித்து வைக்கப்பட்டிருந்த பெண்களுள் ஒரு பெண்ணின் கணவரை காணவில்லை.

அவர் இருந்தால் அவரது கணவரும் இருந்திருப்பார். அவர் திரும்பி வந்த போது அவருடைய மனைவி முஸ்லிம்களிடம் கைதாகி விட்டார் என்பது தெரிய வந்தது. உடனே அவர் சத்தியம் செய்தார்.

முஹம்மது (ஸல்) அவர்களுக்கு நஷ்டம் ஏற்படுத்தாமல் நான் நிம்மதியடைய மாட்டேன். அவர்களது சஹாபாக்களின் இரத்தங்களை சிந்தாமல் நான் நிம்மதியடைய மாட்டேன் என்று அவர் சத்தியம் செய்திருந்தார். இவ்வாறு அவர் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தங்கியிருந்த இடத்திற்கு அருகில் வந்து விட்டார். அப்போது ஹஸ்ரத் அப்பாது பின் பஷர் அவர்களை அந்த பள்ளத்தாக்கின் வாசலில் பார்த்தார். நமது எதிரியின் காவலாளி ஆவார் இவர் என்று கூறினார்.

அவர் அம்பும் எய்தார். அது அப்பாது பின் பிஷர் அவர்களின் உடலில் பட்டது. அப்பாது பின் பிஷர் அவர்கள் அப்போது தொழுது கொண்டிருந்தார்கள். அவர்கள் அம்பை பிடுங்கி எறிந்து விட்டு தொழுது கொண்டிருந்தார்கள். அவர் இரண்டாவது அம்பை எய்தார். அதுவும் அவர்கள் மீது பட்டது. அன்னார் அதையும் பிடுங்கி எறிந்தார். பிறகு அவர் மூன்றாவது அம்பை ஏய்த போது கணிசமான இரத்தம் வெளியேறி இருந்தது. அன்னார் தொழுகையை நிறைவு செய்தார்கள். ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிரை எழுப்பினார்கள். அம்மார் பின் யாஸிர் எழுந்து அப்பாது பின் பஷர் காயமுற்றிருக்கும் நிலையைப் பார்த்தார். என்னை முதலிலேயே ஏன் எழுப்பவில்லை? என்று கேட்டார். அதற்கு அப்பாது பின் பிஷர் அவர்கள், நான் சூரா கஃபை ஓதிக் கொண்டிருந்தேன். நான் தொழுகையை முறிப்பதை விரும்பவில்லை.

(சீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 2 பக்கம் 368–369, கஸ்வாத் ஸாதுர் ரிகாஹ் – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

இது தான் அம்மக்களுடைய இபாதத்தின் நிலையாக இருந்தது.

ஹஸ்ரத் அபூ சயீது குத்ரி அறிவிப்பு செய்கின்றார்கள்:

நான் ஹஸ்ரத் அப்பாது பின் பிஷர் அவர்கள் கூறக் கேட்டுள்ளேன். அபூ சயீதே! நான் இரவில் கனவில் பார்த்தேன். வானம் எனக்காக திறந்திருக்கிறது. பிறகு மூடி விட்டது. அவர்கள் கூறினார்கள். இன்ஷா அல்லாஹ் எனக்கு ஷஹாதத் கிடைக்கும் என்று தெரிகிறது. நான் கூறினேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் சிறந்தவற்றை பார்த்துள்ளீர்கள்.

ஹஸ்ரத் அபூ சயீது குத்ரி அறிவிக்கின்றார்கள்:

யமாமா போரில் ஹஸ்ரத் அப்பாது பின் பஷர் அன்ஸாரி அவர்களை அழைத்துக் கொண்டிருந்ததை பார்த்தேன். அவர் மக்களை அழைத்து வாளின் உறையை உடைத்து விடுங்கள் என்று கூறியவாறு அம்மக்களை விட்டு தனித்து விட்டார். அவர் அன்ஸார்களில் கலந்து கொள்ளாத 400 பேரை கடந்து ஹஸ்ரத் அப்பாது பின் பிஷர், அபூ தஜானா, ஹஸ்ரத் பராஹ் பின் மாலிக் ஆகியோர் பாபுல் ஹதீகா வரை சென்றடைந்தார்கள்.

அவர்கள் கடும் யுத்தம் செய்தார்கள். ஹஸ்ரத் அப்பாது பின் பிஷர் அந்த இடத்தில் ஷஹீதானார்கள். நான் அவருடைய முகத்தில் வாளின் அடையாளங்களை பார்த்தேன். எந்த அளவுக்கு என்றால் உடலிலுள்ள ஒரு சில அடையாளங்களை வைத்து தான் அவர்களை அடையாளங்கண்டு கொண்டேன்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 336–337, அப்பாது பின் பஷர் (ரலி), 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

பிறகு ஹஸ்ரத் சவாத் பின் கஸிய்யா இவரும் அன்ஸாரி ஆவார். அவரைப் பற்றி இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் சவாத் பின் கஸிய்யா பனூ அதீ கோத்திரத்தைச் சார்ந்த பனூ நஜ்ஜாரைச் சார்ந்தவராவார். பத்ர், உஹது, அகழ் மற்றும் அனைத்து போர்களிலும் கலந்து கொண்டார். பதர் போரில் இவர்கள் காலித் பின் ஹஷாம் மக்ஸூமி என்பவரை கைது செய்தார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. நபி (ஸல்) அவர்கள் அவர்களை கைபருடைய பணியாளராக ஆக்கி அனுப்பினார்கள். அங்கு அவர்கள் சென்று மிகச்சிறந்த பேரீச்சம் பழங்களை கொண்டு வந்தார். ஒரு சாஹ் பேரீச்சம் பழங்களும், இரண்டு சாஹ் அளவு பேரீச்சம் பழங்களும் நபி (ஸல்) அவர்கள் அவரிடமிருந்து வாங்கினார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 590, சவாத் பின் கஸிய்யா (ரலி) – பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அந்த பேரீச்சம் பழங்கள் பிடித்திருந்தன. நபி (ஸல்) அவர்கள் அதனுடைய அப்போதைய விலைக்கு போதுமான பேரீச்சம் பழங்களை கொடுத்து அதை வாங்கினார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யினில் எழுதியுள்ளார்கள்:

பத்ர் போருக்குப் பிறகு நடந்த சம்பவங்களில் ஹஸ்ரத் சவ்வாதுடைய நற்பேறு மற்றும் நபி (ஸல்) அவர்கள் மீது இருந்த அன்பு தொடர்பாக ஒரு சம்பவம் வருகிறது. ஹிஜ்ரி இரண்டாம்

ஆண்டு ரமலானின் 17 வது நாள் ஜுமுஆ நாளாக இருந்தது. ஆங்கில கணக்கின் படி கி.பி 623 மார்ச் 14 ஆகும். அன்று காலை எழுந்து எல்லாரும் தொழுதார்கள். பிறகு திறந்த வெளியில் ஓரிறைவனை புகழ்ந்தவாறு நபி (ஸல்) அவர்கள் ஒரு குத்பா கொடுத்தார்கள்.

இதற்குப் பிறகு நபி (ஸல்) அவர்கள் ஜிஹாது தொடர்பாக குத்பா கொடுத்தார்கள். பிறகு சிறிது வெளிச்சம் வந்ததும் அன்னார் அம்பினால் சைகை செய்தவாறு முஸ்லிம்களின் அணிகளை சரி செய்தார்கள். சவாத் என்ற பெயருடைய ஒரு சஹாபி அணியில் சற்று முன்னால் நகர்ந்து நின்று கொண்டிருந்தார்.

அன்னார் தனது அம்பினால் சைகை செய்தவாறு அவரை பின்னால் தள்ளினார்கள். ஆனால் தற்செயலாக அன்னாரது அம்பின் அந்த கட்டை அவரது நெஞ்சின் மீது பட்டுவிட்டது. உடனே அவர் உரத்த குரலில் கூறினார். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! உங்களை இறைவன் உண்மையுடனும் நீதியுடனும் அனுப்பி இருக்கின்றான்.

ஆனால் வியத்தகு சம்பவம் என்னவென்றால், அன்னார் வரிசையை சரி செய்து கொண்டிருந்த போது அன்னாரது அம்பின் கட்டை அவருடைய நெஞ்சில் பட்டுவிட்டது. அவர் மிகவும் தைரியமாக கூறினார். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! உங்களை இறைவன் உண்மையுடனும் நீதியுடனும் அனுப்பி இருக்கின்றான். ஆனால் நீங்கள் என்மீது நீதிக்கு மாற்றமாக அம்பை ஏய்து விட்டீர்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் கண்டிப்பாக இதற்கு பதிலாக பழிவாங்குவேன் என்று கூறினார்.

சுவாதிற்கு என்னாகி விட்டது என்று சஹாபாக்களுக் இது பெரும் சங்கடமாகி விட்டது. ஆனால் நபி (ஸல்) அவர்கள் மிகவும் பணிவுடன் அவரிடம் கூறினார்கள்.

நல்லது! நான் உம்மீது அம்பு எய்திருந்தால் நீரும் என்மீது அம்பு எய்து விடுவீராக. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது நெஞ்சியிலிருந்து துணியை விலக்கினார்கள். சுவாது அவர்கள் பணிவோடு முன்னே வந்து அன்னாரது நெஞ்சில் முத்தமிட்டார்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் புன்முறுவல் செய்தவாறு, சுவாத் நீர் என்ன செய்தீர்? என்று கேட்டார். அவர் மிகவும் பணிவு நிறைந்த குரலில், அல்லாஹ்வின் தூதரே! எதிரிகள் முன்னே நிற்கிறார்கள். இங்கிருந்து தப்பிச் செல்ல முடியுமா? இல்லையா? என்று தெரியாது. எனக்கு ஷஹாதத் கிடைக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். அதற்கு முன் உங்களுடைய அருளுக்குரிய உடலை முத்தமிட்டு அன்பு காட்ட வேண்டும் என்று நான் விரும்பினேன் என்றார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் அவரது நலனுக்காக துஆ செய்தார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களால் எழுதப்பட்ட சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல், பக்கம் 357–358 & அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 590, சவாத் பின் கஸிய்யா (ரலி) – ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

இந்த சஹாபாக்களுக்கு நபி (ஸல்) அவர்கள் மீது இருந்த அன்பும் நேசமும் வியக்கத்தக்கது. ஹஸ்ரத் உக்காஷா அவர்களது சம்பவம் வந்தது. அவரும் வயது முதிர்ந்தவராக இருந்தார்கள். இது ஆரம்ப கட்டத்திலுள்ள நிலையாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது அன்பை வெளிப்படுத்துவதற்கு மட்டுமின்றி அவர்களுடைய நெருக்கத்தை பெற வேண்டும் என்று அவர்கள் எப்பொழுதுமே ஆசை கொண்டவர்களாக இருந்தார்கள்.

அதற்காக முயற்சி செய்பவர்களாகவும் இருந்தார்கள். அல்லாஹ் இந்த மின்னிக் கொண்டிருக்கின்ற நட்சத்திரங்களின் தகுதிகளை உயர்த்துவானாக. நமக்கும் அரபு நாட்டைச் சார்ந்த அந்த ரஸூலின் மீது காட்ட வேண்டிய பேரன்பின் உண்மைத்துவத்தை புரிந்து கொள்ளக்கூடிய தவ்ஃபீக்கை வழங்குவானாக.

## வக்ஃபே நவ் பெற்றோர்களின் கடமை

(ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 28.10.2016 அன்று ஆற்றிய ஜுமுஆ குத்பா பேருரையிலிருந்து...)

கடந்த நாட்களில் இங்கு வக்ஃபே நவ் பிள்ளைகளுக்காக வகுப்பு ஒன்றை நான் நடத்தினேன். அதில் ஒரு பையன் என்னிடம், நாங்கள் எங்களை வக்ஃப் செய்து முழு நேரமும் ஜமாஅத்திற்கு தொண்டாற்ற அர்ப்பணித்து விட்டால் எங்களது பெற்றோர்களுக்கு எங்களால் எப்படி பொருளாதார உதவி செய்ய முடியும்? அல்லது அவர்களுக்கான ஏனைய தொண்டுகளை எவ்வாறு எங்களால் ஆற்ற இயலும்? எனக் கேட்டான்.

நாங்கள் உன்னை வக்ஃப் செய்து விட்டோம். இனி நீ ஜமாஅத்தின் அமானிதமாகவே எங்களிடம் இருக்கின்றாய். மற்ற உனது சகோதர சகோதரிகள் எங்களுக்கு தொண்டாற்றுவார்கள். நீ உன்னை முற்றிலும் காலத்தின் கலீஃபாவிடம் ஒப்படைத்து அவர்களின் கட்டளைக்கேற்ப நீ செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தை தாய், தந்தையர் குழந்தைப் பருவத்திலேயே வக்ஃபே நவ் பிள்ளைகளிடம் ஊட்டவில்லை என்பது அந்தப் பையனின் கேள்வியிலிருந்து வெளிப்படுகின்றது.

நான் அந்த தாய், தந்தையரிடம் முதலில் இதனை கூறிக்கொள்ள விரும்புகின்றேன். வக்ஃபே நவ் என்ற பெயர் மட்டும் போதுமானதல்ல. மாறாக, வக்ஃப் செய்யப்பட்ட பிள்ளை இளமைப் பருவத்தை அடையும் வரை பெற்றோர்களின் பொறுப்பு உள்ளது. அதன் பிறகு அந்தப் பிள்ளைகளின் பொறுப்பாகி விடுகின்றது.

உலகக் கல்வியைக் கற்ற சில பிள்ளைகள் வெளிப்படையில் பெரிய உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனர்; தொண்டாற்றுகின்றனர். ஆனால், பின் நாட்களில் சில உதாரணங்களும் காணக் கிடைக்கின்றன. ஜமாஅத் கொடுக்கும் அலோவன்ஸ் அவர்களுக்கு போதுமானதாக இருப்பதில்லை என்ற காரணத்தால் விலகி விடுகின்றனர்.

ஒரு பெரிய நோக்கத்தை அடைவதற்கு துன்பத்தை எதிர்கொள்வதும் தியாகங்கள் செய்வதும் அவசியமாகும்.

எனவே, குழந்தைப் பருவம் முதல் வக்ஃபே நவ் பிள்ளைகளின் மூளைகளில் வாழ்க்கையை அர்ப்பணிப்பதை விட பெரிய விஷயம் வேறெதுவும் இல்லை என்ற எண்ணத்தை உருவாக்கி விட வேண்டும். உலக ரீதியில் பிறரைப் பார்ப்பதை விட அல்லது எனது இந்த வகுப்புத் தோழன் இன்ன கல்வியைக் கற்று இலட்சக்கணக்கில் சம்பாதிக்கின்றார்.

ஆனால், அவரது ஒரு மாத வருமானத்தில் ஒரு நாள் வருமானத்தைக் கூட என்னால் சம்பாதிக்க முடியவில்லையே என்ற எண்ணம் பிள்ளைகளுக்கு இருக்கக் கூடாது.

**ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

**நமது நபி (ஸல்) அவர்களிடமிருந்து வெளிப்பட்டது போன்று வேறு எந்த நபியிடமிருந்தும் இந்த அளவு அற்புதங்கள் வெளிப்பட்டதில்லை. ஏனென்றால், முந்தைய நபிமார்களின் அற்புதங்கள் அவர்கள் மரணித்ததோடு மரணித்து விட்டன.**

**ஆனால் நமது நபி (ஸல்) அவர்களது அற்புதங்கள் இதுவரை வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவை கியாமத் வரை வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். எவையெல்லாம் எனக்கு ஆதரவாக வெளிப்படுகின்றனவோ உண்மையில் அவை அனைத்தும் பெருமானார் (ஸல்) அவர்களது அற்புதங்களேயாகும்.**

(ததிம்மா ஹகீகத்துல் வஹீ பக்கம் 35, ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 468)

## ஜமாஅத் உறுப்பினர்கள் அதிகம் அதிகமாக இந்த துஆக்களை செய்து வாருங்கள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இங்கிலாந்தில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டின் முதல் நாளில் அதாவது 3 ஆகஸ்ட் 2018 அன்று நிகழ்த்திய மாநாட்டின் துவக்க உரையில் ஜமாஅத் உறுப்பினர்களை அதிகம் அதிகமாக துரூது ஷரீஃப் துஆவையும், கீழ்க்கண்ட துஆக்களையும் ஓதி வரும்படி வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

(1) اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ اَللّٰهُمَّ بَارِكْ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ۔

பொருள்: இறைவா! நீ இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் அவர்களுடைய குடும்பத்தார் மீதும் கருணை காட்டியது போன்று முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும், அவர்களுடைய குடும்பத்தார் மீதும் கருணை காட்டுவாயாக. நிச்சயமாக நீ புகழுக்குரியவனும் மகத்துவமுள்ளவனும் ஆவாய்.

இறைவா! நீ இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் அளவற்ற அருட்களைக் கொடுத்தது போன்று முஹம்மது (ஸல்) அவர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்திற்கும் அருள் புரிவாயாக. நிச்சயமாக நீ புகழுக்குரியவனும் மகத்துவமுள்ளவனும் ஆவாய்.

(2) رَبَّنَا لَا تُزِغْ قُلُوْبَنَا بَعْدَ اِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِنْ لَّدُنْكَ رَحْمَةً ۚ اِنَّكَ اَنْتَ الْوَهَّابُ

பொருள்: எங்களை இறைவா! நீ எங்களுக்கு நேர்வழி காட்டியதன் பின்னர் எங்கள் உள்ளங்களை கோணலாக்காதிருப்பாயாக. எங்களுக்கு உன்னிடமிருந்து அருளை வழங்குவாயாக. நிச்சயமாக நீயே வாரி வழங்குபவனாவாய். (3:9)

رَبَّنَا اغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَاِسْرَافَنَا فِيْٓ اَمْرِنَا وَثَبِّتْ اَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ

பொருள்: எங்கள் இறைவா! எங்கள் குற்றங்களையும், எங்கள் செயல்களில் எங்களின் வரம்பு மீறுதல்களையும் எங்களுக்கு மன்னித்தருள்வாயாக! எங்கள் காலடிகளை உறுதிப்படுத்துவாயாக. மேலும் நிராகரிக்கும் மக்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக. (3:148)

(4) رَبَّنَا ظَلَمْنَآ اَنْفُسَنَا ۜ وَاِنْ لَّمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُوْنَنَّ مِنَ الْخٰسِرِيْنَ

பொருள்: எங்கள் இறைவா! நாங்கள் எங்களுக்கே அநீதி இழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்குக் கருணை காட்டாவிடில் நாங்கள் நஷ்டமடைந்தவர்களைச் சார்ந்தவர்களாகி விடுவோம். (7:24)

(5) رَبَّنَآ اٰتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَّفِي الْاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ

பொருள்: எங்கள் இறைவா! எங்களுக்கு இந்த உலகிலும் வெற்றியினை வழங்குவாயாக. மறுமையிலும் வெற்றியினை (வழங்குவாயாக.) எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்தும் காப்பாற்றுவாயாக. (2:202)

(6) اَللّٰهُمَّ اِنَّا نَجْعَلُكَ فِيْ نُحُوْرِهِمْ وَنَعُوْذُبِكَ مِنْ شُرُوْرِهِمْ

பொருள்: என் இறைவா! நாங்கள் உன்னை அவர்களின் உள்ளத்தில் வைக்கின்றோம். அதாவது உன் மீதான அச்சத்தை அவர்களது உள்ளத்தில் நிறைப்பாயாக. மேலும் அவர்களது விஷமங்களிலிருந்து உன்னிடம் பாதுகாப்பு தேடுகின்றோம்.

(அபூதாவூது, கிதாப் ஃபஸாயிலுல் குர்ஆன்)

(7) رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ رَبِّ فَاحْفَظْنِيْ وَانْصُرْنِيْ وَارْحَمْنِيْ

பொருள்: எங்கள் இறைவா! அனைத்தும் உனக்கு தொண்டு செய்பவைகளாகும். என் இறைவா! என்னை பாதுகாப்பாயாக. மேலும் எனக்கு உதவி செய்வாயாக. மேலும் என் மீது கருணை காட்டுவாயாக.

(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அருளப்பட்ட இல்ஹாமிய துஆ)

## தேசிய இஜ்திமா 2018 ஆம் ஆண்டிற்கான ஒப்புதல்

**ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் மிகுந்த பரிவுடன் கிளை அமைப்புகளின் தேசிய இஜ்திமாக்களை 12,13,14 அக்டோபர் 2018 (வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள்.**

**கிளை அமைப்புகளைச் சார்ந்த உறுப்பினர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் காதியான் தாருல் அமானின் ஆன்மீகச் சூழலில் நடைபெறவிருக்கின்ற இந்த அருளுக்குரிய தேசிய இஜ்திமாவில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். இந்த இஜ்திமாக்கள் எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா. (பத்ர் வாரப் பதிப்பு)**

# சய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஜெர்மனி சுற்றுப் பயணம் 2017

**23 ஏப்ரல் 2017 ல் ஜெர்மனியின் செயற்குழு கூட்டத்தில் ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கலந்து கொண்டு, பல்வேறு செயலர்கள் செய்கின்ற பணிகளைப் பற்றி கேட்டு அவர்களுக்கு வழங்கிய வழிகாட்டல்கள்**

**(அறிக்கை: அப்துல் மாஜித் தாஹிர், கூடுதல் வகீலுத் தஃப்ஸீர், இலண்டன்)**

*(29 வது இதழின் தொடர்ச்சி...)*

**தர்பிய்யத் செயலர்:**

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தர்பிய்யத் செயலரிடம், தர்பிய்யத் தொடர்பாக ஒட்டுமொத்த ஜமாஅத் அளவில் என்ன பெரிய முயற்சி செய்யப்படுகின்றது என்று கேட்டார்கள்.

அதற்கு தர்பிய்யத் செயலர் அவர்கள், ஒட்டுமொத்த ஜமாஅத் அளவில் மிகப்பெரிய முயற்சியாகச் செய்யப்பட்டு வருவது பள்ளிவாசல்களை நிரப்புவதாக இருக்கின்றது. மேலும் இதற்கான முயற்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன என்று கூறினார்கள்.

அதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

இரண்டு மாதங்களுக்கு முன்னதாக நான் ஒரு குத்பா பேருரையில் குறிப்பாக தொழுகையைப் பற்றி எடுத்துக் கூறியிருந்தேன். பல்வேறு இடங்களிலிருந்தும் குறிப்பாக பெரிய ஜமாஅத்துகளிலிருந்தும் அதற்குப் பிறகு இது தொடர்பான அறிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. அதாவது இந்த அளவு வித்தியாசம் ஏற்பட்டிருக்கின்றது. இந்த அளவு தொழுகையின் பக்கம் மக்கள் அதிகமாக கவனம் செலுத்து வருகின்றனர் என்று அறிக்கைகள் வருகின்றன.

ஜெர்மனியில் எந்த அளவு மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது? என்று ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கேட்டார்கள்.

இதற்கு தர்பிய்யத் செயலர் அவர்கள், அல்லாஹ்வின் அருளால் இங்கு ஜெர்மனியில் போதுமான அளவு மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் குத்பாவின் ஒளியில் நாங்கள் செயற்குழுவைச் சார்ந்த ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஓர் அடையாள அட்டை தயார் செய்து கொடுத்துள்ளோம். அதாவது செயற்குழுவைச் சார்ந்த உறுப்பினர்கள் கண்டிப்பாக பள்ளிவாசலுக்கு வர வேண்டும். அப்போது தான் மற்ற மக்களுக்கு அவர்கள் ஒரு முன்மாதிரியாகத் திகழ்வார்கள் என்ற விஷயத்தை அவர்களுக்கு அறிவுறுத்தும் வகையில் ஒவ்வொருவருக்கும் ஓர் அடையாள அட்டை வழங்கப்பட்டிருக்கின்றது என்று கூறினார்கள்.

அதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

இங்குள்ள ஜமாஅத்துகளில் எந்த ஜமாஅத்தில் தொழுகை மையங்கள் இல்லாமல் இருக்கின்றது என்பதை எனக்குத் தெரிவியுங்கள் என்று கூறினார்கள்.

அப்போது ஒரு ஜமாஅத்துடைய தலைவர் அவர்கள், எங்களுடைய நகரத்தில் ஒரே ஒரு ஹால் மட்டுமே உள்ளது. அங்கு ஜுமுஆவை நாங்கள் தொழுது வருகின்றோம் என்று கூறினார்கள்.

மேலும் ஹுஸூர் அவர்கள் கேட்டதற்கிணங்க அந்த ஜமாஅத்தின் தலைவர் அவர்கள், எங்களுடைய ஜமாஅத்தின் செயற்குழு உறுப்பினர்களுடைய எண்ணிக்கை 17 ஆகும். ஜுமுஆ தொழுகைக்கு ஏறக்குறைய 20 பேர் வருகின்றனர் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

எல்லாவற்றிற்கும் முதலாவதாக, உங்களுடைய ஜமாஅத்திலுள்ள செயற்குழு உறுப்பினர்களை தொழுகையில் பங்கு பெற வைக்க வேண்டும். அவர்கள் தொடர்ச்சியாக தொழுகைகளில் பங்கு பெற வேண்டும். சீர்திருத்தம் என்பதை நாம் முதலில் வீட்டிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.

எனவே உங்களுடைய வீடு என்பது செயற்குழு ஆகும். எனவே முதலாவதாக, செயற்குழுவிலுள்ள உறுப்பினர்கள் தங்களை சீர்திருத்திக் கொள்ள வேண்டும். உங்களுடைய ஜமாஅத்திலுள்ள செயற்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 17 ஆகும். அன்ஸாருல்லாஹ் மற்றும் குத்தாமுல் அஹ்மதிய்யாவுடைய செயற்குழு உறுப்பினர்களும் இருப்பார்கள். இவர்கள் எல்லாரையும் சேர்த்தால் 30 அல்லது 35 பேர் இருப்பார்கள்.

இவர்கள் அனைவருமே முறையாக தொழுகையைப் பேணுபவர்களாக, பள்ளிவாசலுக்கு வந்து தொழக்கூடியவர்களாக இருக்க வேண்டும். பிறகு இவர்களது எண்ணிக்கை பள்ளிவாசலை அல்லது அந்த தொழுகை மையத்தை நிரப்புவதற்கு போதுமானதாக இருக்கும்.

எனவே முதலில் உங்களுடைய ஜமாஅத்தைச் சார்ந்த செயற்குழு உறுப்பினர்களிடம் தொழுகின்ற பழக்கத்தை ஏற்படுத்துங்கள். செயற்குழு உறுப்பினர்கள் சரியான முறையில் தொழ ஆரம்பித்து விட்டால் தங்களை சீர்திருத்திக் கொண்டால் பிறகு தானாகவே ஜமாஅத்திலும் சீர்திருத்தம் ஏற்பட்டு விடும். எனவே நீங்கள் மற்றவர்களை சீர்திருத்துவதற்குப் பகரமாக முதலில் உங்களை சீர்திருத்திக் கொள்ளுங்கள்.

இதற்குப் பிறகு தர்பிய்யத் செயலர் அவர்கள், இதைத் தவிரவும் நாங்கள் பல முயற்சிகள் செய்து வருகின்றோம். அதாவது குடும்ப விவகாரங்களில் நல்ல நிலைமையை ஏற்படுத்த நாங்கள் முயற்சி செய்து வருகின்றோம். இதற்காக நாங்கள் முரப்பிகளோடு இணைந்து செயல்திட்டத்தை உருவாக்கி அதற்கேற்ப செயல்படுகின்றோம் என்று கூறினார்கள்.

அப்போது ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

இவ்வகையில் குறிப்பாக இளைஞர்கள் மத்தியிலும் இந்த பணியை நீங்கள் செய்ய வேண்டும். சில நேரங்களில் அன்ஸாருல்லாஹ்வின் இரண்டாவது அணியில் இருக்கின்றவர்கள் தொடர்பாகக்கூட சில புகார்கள் வருகின்றன. லஜ்னா தரப்பிலிருந்தும் சில புகார்கள் வருகின்றன.

அதாவது, சில பெண்கள் இங்கு விசா பெறுவதற்காகத் திருமணங்கள் செய்கின்றனர். விசா பெற்ற பிறகு அந்த திருமணம் முடிந்து விடுகின்றது. இதில் அதிகபட்சம் ஆண்களின் தவறும் இருக்கின்றது. 40 சதவிகிதம் பெண்களுடைய தவறு இருந்தாலும் 60 சதவிகிதம் ஆண்களுடைய தவறு இதில் இருக்கின்றது.

பெரும்பாலும் ஆண்கள் தங்களைச் சரியாக்கிக் கொள்வதே இல்லை. முதலில் பெண் தன்னைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

ஆனால் முதலில் அவர்கள் தங்களைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டும். ஆண்கள் தங்களைச் சீர்திருத்திக் கொண்டால் பிறகு அந்த வீடே சரியாகி விடும். குழந்தைகளுடைய தர்பிய்யத்தும் நல்ல முறையில் இருக்கும். அவர்களுடைய தர்பிய்யத்தும் சிறந்த முறையில் நடைபெறும். அவ்வாறு இல்லையென்றால் பிறகு பெண்ணே அந்த ஆணை எதிர்த்து கையை ஓங்க ஆரம்பித்து விடுகின்றாள். பிறகு சண்டைகள் ஏற்படுகின்றன. சில சமயங்களில் மூன்று அல்லது நான்கு குழந்தைகள் பிறந்த பிறகும் கூட இது போன்ற சண்டைகள் ஏற்படுகின்றன.

எதுவரையென்றால் குலா மற்றும் தலாக் வரை விஷயம் சென்று விடுகின்றது. நான் குலா பெற்றுக் கொள்ளப் போகின்றேன். அல்லது நான் தலாக் கொடுக்கப் போகின்றேன் என்று கூற ஆரம்பித்து விடுகின்றார்கள். இந்த எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. இதற்காக எல்லா மட்டத்திலும் ஜமாஅத் தலைவர்கள் தங்களது தர்பிய்யத் செயலர்களை துடிப்புடன் செயல்பட வைப்பது அவசியமானதாக இருக்கிறது. நீங்களும் இவற்றின் மீது நிரந்தரமாக உங்களது பார்வையை வைத்திருக்க வேண்டும்.

இவற்றை கண்காணிப்பது மிகவும் அவசியமானதாக இருக்கின்றது. இதற்காக ஒரு நல்ல செயல் திட்டத்தை உருவாக்குங்கள். அது தொடர்பாக எனக்கு அறிக்கையையும் நீங்கள் தாருங்கள். அதாவது அத்தகைய குடும்பங்களில் முதலில் நிலைமைகள் எவ்வாறு இருந்தன. இப்போது அங்குள்ள நிலைமை எவ்வாறு மாறியிருக்கின்றது என்பதை பற்றிய விபரங்கள் அதில் இருக்க வேண்டும்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

இவ்வாறே சீர்திருத்தக் குழுவினுடைய பணி ஒரு சம்பவம் நடந்த பிறகு அதைக் கண்காணிக்கச் செல்வது அல்ல. மாறாக, லஜ்னா தமது மட்டத்திலும், குத்தாம் தமது மட்டத்திலும், அன்ஸார் தமது மட்டத்திலும், ஜமாஅத் அளவிலும் சீர்திருத்தக் குழுவினுடைய உறுப்பினர்களும் எல்லா இடங்களிலும் தமது பார்வையைக் கவனமாக வைத்திருக்க வேண்டும்.

அத்தகைய விவகாரங்கள் எழுகின்ற போது அவை ஒரே நாளில் எழுந்து விடுவதில்லை. மாறாக, குடும்பங்களில் ஏற்படுகின்ற பிரச்சனைகள் மெதுமெதுவாக வெளியில் வந்து விடுகின்றன. அவை வெளியில் வர ஆரம்பித்த உடனேயே சீர்திருத்தத்திற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள ஆரம்பித்து விட வேண்டும்.

ஜமாஅத் தலைவர்களும், தர்பிய்யத் செயலர்களும், குத்தாமுல் அஹ்மதிய்யாவும், அன்ஸாருல்லாஹ்வும், ஜமாஅத்துடைய தலைமையக அமைப்பும் பிரச்சனை ஆரம்பமாகின்ற தருணத்திலேயே வேலை செய்ய ஆரம்பித்து விட வேண்டும். இதன் மூலமாக பிரச்சனைகள் குறைவதற்கு வாய்ப்பிருக்கின்றது.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

இங்கு சுதந்திரம் என்ற பெயரில் ஆண்கள் மிகவும் சுதந்திரமானவர்களாக ஆகிவிட்டனர். இங்கு பிறக்கின்ற ஆண் மற்றும் பெண் குழந்தைகளிடமிருந்து புகார்கள் வருகின்றன. சிலர் பாகிஸ்தானிலிருந்து இங்கு வந்திருக்கின்றார்கள். அவர்களது குடும்பத்தைச் சார்ந்த ஆண் பிள்ளைகள் மற்றும் பெண் பிள்ளைகளிடமிருந்து புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன.

எனவே முழுமையான முறையில் ஆய்வு செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. எங்கெல்லாம் பலவீனங்கள் இருக்கின்றனவோ, அந்த பலவீனங்களை நாம் எவ்வாறு அகற்ற முடியும்? யார் இதில் அதிகம் குற்றம் புரிந்தவராக இருக்கின்றார்? அந்த குற்றத்திற்கான காரணங்கள் என்ன? வெறும் உலக ரீதியிலான காரணங்கள் மட்டும் தான் இருக்கின்றதா? அல்லது உண்மையிலேயே ஒரு பிரிவினர் மற்ற பிரிவினர் மீது அநீதி இழைத்திருக்கின்றனரா? துன்பம் இழைத்திருக்கின்றார்களா? என்பதையெல்லாம் ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

இதற்குப் பிறகு இத்தகைய விவகாரங்கள் பொறுப்பாளர்களிடம் செல்கின்ற பொழுது, அவர்கள் தரப்பிலிருந்தும் எதிர்மறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் காரணமாக, நிலைமையில் மேலும் சீர்குலைவு ஏற்படுகின்றது. எனவே இந்த எல்லா விஷயங்களையும் பற்றி நீங்கள் தெரிந்திருக்க வேண்டும்.

அப்போது தர்பிய்யத் செயலர் அவர்கள், நாங்கள் இந்த வருடம் அனைத்து ஜமாஅத்துகளிலும் உள்ள தர்பிய்யத் செயலர்களையும் செயல் துடிப்புள்ளவர்களாக ஆக்கிக் கொண்டிருக்கின்றோம். மேலும் அதற்காக நாங்கள் ஒரு Refresher Course நிகழ்ச்சியையும் நடத்த இருக்கின்றோம். மேலும் இந்த பணியை நாங்கள் நல்ல முறையில் செய்வோம் –இன்ஷா அல்லாஹ் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

இந்த வருடம் இவர்களை நாங்கள் செயல் துடிப்புள்ளவர்களாக ஆக்கியுள்ளோம் என்று நீங்கள் ஏன் கூறுகின்றீர்கள்? இந்த வருடத்திற்கு முன்னதாகவே நீங்கள் செயல் துடிப்புள்ளவர்களாக ஆகியிருக்க வேண்டும். அதற்கான விளைவு இப்போது தென்பட்டிருக்க வேண்டும். எனவே இனிமேல் நீங்கள் இன்ஷா அல்லாஹ் என்று கூறுவதற்கு பகரமாக மாஷா அல்லாஹ் (எந்த அளவு நாங்கள் சிறப்பாக செயல்பட்டிருக்கின்றோம்) என்று தெரிவிக்கக்கூடிய அளவில் உங்களுடைய பணிகள் இருக்க வேண்டும்.

(தொடரும் - இன்ஷா அல்லாஹ்...)

## காதியானில் 124 –வது ஆண்டு மாநாடு

**ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் காதியானில் நடைபெறும் 124 –வது ஆண்டு மாநாடு 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28, 29, 30 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள்.**

**ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த ஆன்மீக மாநாட்டில் கலந்து கொண்டு அதன் அருள்களிலிருந்து பலன் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!**

**இந்த ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும், நல்ல ஆன்மாக்கள் நேர்வழி பெறுவதற்கு காரணமாக அமைவதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா.**

**(நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாது மர்கஸிய்யா, காதியான்)**

EDITOR
O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 23 August 2018 Issue No. 34

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.500/- (Per Issue Rs. 9/-) (WEIGHT - 20-50 gms/issue)

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

கொண்டே இருக்கின்றன. பூகம்பம் உண்டாகின்றன. மின்னல்கள் தாக்குகின்றன. எரிமலையானது வானவெடியைப் போல் குமுறிக் கொண்டு தனது அக்கினிக் குழம்பைக் கக்குவதன் மூலம் ஆயிரக்கணக்கான உயிர்களுக்கு நஷ்டங்களை விளைவித்துக் கொண்டிருக்கின்றன.

கப்பல்கள் மூழ்குகின்றன. தொடர்வண்டிகளின் விபத்துகளினால் ஆயிரக்கணக்கான உயிர்கள் மடிகின்றன. வெள்ளப்பெருக்கு, புயல் உண்டாவதால் வீடு, வாசல்கள் அழிந்து நாசம் அடைகின்றன. பாம்புகள் தீண்டுகின்றன. வன விலங்குகள் நஷ்டம் விளைவிக்கின்றன.

கொடிய நோய்கள் எங்கும் பரவுகின்றன. மக்கள் அழிவதற்கு ஒரு வாசல் அல்ல; ஆயிரக்கணக்கான வாசல்கள் திறந்திருக்கின்றன. இவை அனைத்தும் குற்றவாளிகளின் தண்டனைக்காக இறைவனது இயற்கை சட்டங்களால் நிர்ணயிக்கப்பட்டவையாகும். இவ்வாறிருக்க இறைவனது ஆட்சி பூமியில் இல்லை என்று எவ்வாறு கூற முடியும்?

உண்மை என்னவென்றால், இறைவனது ஆட்சி பூமியெங்கும் நடைபெற்றே வருகிறது. ஒவ்வொரு பாவியின் கரங்களிலும் கைவிலங்குகள் மாட்டப்பட்டிருக்கின்றன. கால்களில் சங்கிலிகள் பிணைக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் இறைவனது நாட்டமானது தனது சட்டங்களை மிக அதிகமாக மிருதுவாக்கியிருப்பதால் அவ்விலங்குகளும் சங்கிலிகளும் உடனுக்குடன் விளைவை உண்டாக்குவதில்லை.

இறுதியில் மனிதன் தன்னைத் திருத்திக் கொள்ளாவிட்டால் அவனை நிரந்தரமான நரகத்திற்கு இழுத்துச் சென்று அவனைப் பிழைத்திருக்கவும் மரணிக்கவும் முடியாத தண்டனைக்கு ஆளாக்கி விடுகிறது.

சுருங்கச் சொல்லின் சட்டங்கள் இருவகைப்படும். அவற்றில் ஒன்று, மலக்குகளாகிய வானவர்களோடு சம்பந்தப்பட்டதாகும். அதாவது, அவர்கள் கீழ்ப்படிவதற்காக மட்டுமே படைக்கப்பட்டவர்களாவர். மேலும் அவர்களின் கீழ்ப்படிதல் அவர்களின் படைப்பிலேயே அமைந்த ஒளிமயமான சிறப்புத் தன்மையாகும். அவர்களால் பாவம் செய்ய முடியாது. மேலும் அவர்களால் நன்மையில் முன்னேறவும் முடியாது.

இரண்டாவது சட்டம் மனிதனோடு சம்பந்தப்பட்டதாகும். அதாவது மனிதர்களின் இயல்பில் பாவம் செய்யக்கூடிய பண்பு அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் நன்மையில் முன்னேறவும் முடியும். இந்த இரு இயற்கை சட்டங்களும் ஒருபோதும் மாறக் கூடியதன்று. எவ்வாறு மலக்குகள் மனிதனாக முடியாதோ அவ்வாறே மனிதனும் மலக்காக முடியாது.

இந்த இரு சட்டங்களும் மாற்றம் அடையாமல் ஆரம்பத்திலிருந்தே இருந்து வரக்கூடியதும் நிலை கொண்டதுமாகும்.

எனவே வானத்தின் சட்டங்கள் பூமியில் வரமுடியாது. மேலும் பூமிக்காக உள்ள சட்டங்கள் மலக்குகளுக்குப் பொருந்தவும் முடியாது. மனிதனால் செய்யப்படும் பாவங்கள் தவ்பா என்னும் பாவமன்னிப்புத் தேடுதலோடு முடிவு அடையும் போது அது மனிதனை மலக்குகளை விட மிக நல்லவனாக ஆக்க முடியும்.

ஏனெனில் மலக்குகளுக்கு முன்னேறக்கூடிய தன்மை இல்லை. மனிதன் செய்யும் பாவங்கள் தவ்பா என்னும் பாவமன்னிப்புக் கோருவதால் மன்னிக்கப்படுகின்றன. இறைத் தத்துவமானது சில மனிதர்களிடம் தீய செயல்களை நீடிக்கச் செய்துள்ளது.

இதன் நோக்கம் அவர்கள் தங்களது பலவீனங்களை அறிந்து இறைவனிடம் மன்னிப்புக் கோருவதன் மூலம் அவர்கள் மன்னிக்கப்படுவதற்காகவேயாகும். இச்சட்டங்களே மனிதர்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மனித இயல்பும் இதனையே நாடுகிறது. கவனமின்மையும் தவறு விளைவித்தலும் மனித இயல்பிலேயே இருந்து வரக்கூடிய தனித்தன்மையாகும். இது மலக்குகளது தனித்தன்மையன்று. இவ்வாறிருக்க மலக்குகள் சம்பந்தப்பட்ட சட்டங்கள் மனிதர்களுக்காக எவ்வாறு இயங்க முடியும்?

இறைவன் மீது பலவீனங்களைச் சுமத்துவதென்பது மிகவும் தவறான விஷயமாகும். சட்டங்களின் விளைவுகள் மட்டுமே பூமியில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இறைவனுடைய ஆட்சியும் சக்தியும் மகத்துவமும் வானத்தின் எல்லைக்குள் மட்டுமே இருந்து வருமளவிற்கு அவன் பலவீனமானவனா? நவூதுபில்லாஹ்.

(நாங்கள் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம்) அல்லது பூமியை மாறுபட்ட தன் ஆட்சிக்குட்படுத்தியிருக்கும் வேறோர் இறைவன் எவனேனும் பூமியில் உண்டா? வானத்தில் மட்டும் இறைவனது ஆட்சி இருந்து வருவதாகவும் அது பூமியின் மீது இதுவரை வரவில்லை என்றும் கிறித்தவர்கள் வலியுறுத்திவது சரியன்று.

ஏனெனில் வானம் ஒரு பொருட்டுமில்லை என்று அவர்கள் நம்புகிறார்கள். இதன்படி வானத்தில் இறைவனது ஆட்சி உண்டாவதற்கு வானம் என்று ஒன்றுமே இல்லை என்றால் பூமியின் மீது இதுவரை இறைவனது ஆட்சியும் வரவே இல்லை என்றால் இதிலிருந்து இறைவனது ஆட்சி எங்குமே இல்லை என்பது தெளிவாகிறது.

இதற்கு மாறாக நாம் பூமியில் இறைவனது ஆட்சி இருந்து வருவதை நமது கண்களால் பார்த்து வருகிறோம். மேலும் அவனது சட்டங்களின்படி நமது ஆயுட்காலமானது முடிந்து விடுகின்றன.

நமது நிலைகள் மாறிக் கொண்டே இருக்கின்றன. நூற்றுக்கணக்கான விதங்களில் சுகபோகங்களையும், துக்கங்களையும் நாம் பார்த்து வருகின்றோம். இறைவனது கட்டளையால் ஆயிரக்கணக்கான மக்கள் மரணித்துக் கொண்டும் பிறந்து கொண்டும் இருக்கிறார்கள். துஆக்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. அடையாளங்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

பூமியானது ஆயிரக்கணக்கான வகைகளில் மரம், செடி, கொடிகள், பூக்கள் ஆகியவற்றை அவனது கட்டளையால் உற்பத்தி செய்து வருகிறது. இவை அனைத்தும் அவனது ஆட்சி இன்றி நடைபெறுகின்றனவா?

இதுவேயன்றி வானத்தில் செயல்பட்டுக் கொண்டிருப்பவைகளும் (அதாவது சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் முதலியவை) முறைப்படி எவ்விதமாறுதலுமின்றி ஒரேவிதமாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றில் மாறுதலும் வேறுபாடும் ஏற்படுத்தக் கூடிய எந்த மாற்றம் செய்பவரையும் காண முடியவில்லை.

இதற்கு மாறாக பூமி ஆயிரக்கணக்கான மாற்றங்களுக்கும் புரட்சிகளுக்கும் வேறுபாடுகளுக்கும் இலக்காகிக் கொண்டு வருகிறது. ஒவ்வொரு நாளும் கோடிக்கணக்கான மக்கள் மரணித்துக் கொண்டும் பிறந்து கொண்டும் இருக்கிறார்கள். ஒவ்வொரு வகையிலும் ஒவ்வொரு விதத்திலும் ஒரு அபார சக்தியுள்ள படைப்பாளனின் ஆதிக்கத்தையே இதனால் உணர முடிகிறது.

இவ்வாறிருக்க இதுவரை பூமியில் இறைவனது ஆட்சி உண்டாகவில்லையா? பைபிளின் புதிய ஏற்பாட்டில் இதுவரை பூமியின் மீது இறைவனது ஆட்சி ஏன் உண்டாகவில்லை என்பதற்கான எவ்வித ஆதாரமும் அளிக்கப்படவில்லை.

(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 34–37)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad